மதுராந்தகம், சார் ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.கிள்ளி சந்திர சேகர், இ.ஆ.ப.,

ந.க.எண்.2217/2014 ஆ

நாள்.12.01.2018

பொருள் கிராம நிர்வாகம் - பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - காஞ்சிபுரம் மாவட்டம் - மதுராந்தகம் கோட்டம் - கருணை அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலராக பணி நியமனம் வழங்கப்பட்டு மதுராந்தகம் வட்டத்தில் பணிபுரிந்து வரும் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.எம்.பாலாஜி என்பவருக்கு - பணி வரன்முறை செய்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை

1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.28212/2002/அ4, நாள்.10.12.2011.
2. அரசு ஆணை நிலை 80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ-1) துறை 02.03.2016.
3. முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண். ஆ.கு.2/7427/2014, நாள்.10.11.2016.
4. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர், அவர்களின் செயல்முறைகள் ந.க.28212/2010/அ4 நாள்.14.11.2017.
5. வட்டாட்சியர், மதுராந்தகம் கடித ந.க.35/2018/அ3 நாள்.04.01.2018.
6. திரு.எம்.பாலாஜி, கிராம நிர்வாக அலுவலர், உடல் தகுதி சான்று.

----------

உத்தரவு:-

காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலகில் மதுராந்தகம் கோட்டத்திற்குட்பட்ட மதுராந்தகம் வட்டத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்ட திரு.எம்.பாலாஜி கிராம நிர்வாக அலுவலர் என்பவருக்கு அரசாணை நிலை எண்.80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1) துறை, நாள்.02.03.2016-ன் படி, பார்வை 4-ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் பணிநிலையில் தன்னர் பணியில் சேர்ந்த நாளில் பணியினை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்குரிய உடல் தகுதியினை பெற்றிருக்கிறார் என்பதனை உறுதி செய்து கொண்ட பின்பு மேற்படி உத்தரவினை நடைமுறைப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.எனவே, பார்வை 5-ல் காணும் மதுராந்தகம் வட்டாட்சியர் மேற்படி கிராம நிர்வாக அலுவலரின் பணியில் சேர்ந்த நாளில் தனரது பணியினை வரன்முறைப்படுத்தலாம் என பரிந்துரை கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

3.இந்நேர்வில் பார்வை 6-ல் காணும் உடல் தகுதிக்கான சான்றுகளின் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்குரிய உடல் தகுதியை தனியர் பெற்றிருக்கிறார் என்பதை கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகளுக்கிணங்க கீழ்க்கண்டவாறு தனியர் பணியில் சேர்ந்த நாளில் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | கிராம நிர்வாக அலுவலர் பெயர் மற்றும் வட்டம் (திரு) | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.பாலாஜி,<br>த பெ.வெ.மாரிமுத்து(லேட்)<br>கிராம நிர்வாக அலுவலர்,<br>முருகம்பாக்கம் கிராமம்<br>மதுராந்தகம் வட்டம். | 02.03.2012 முற்பகல் | 02.03.2012 முற்பகல் |

4. மேற்படி தனியரின் பணிவரன்முறை உத்தரவு விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு மதுராந்தகம், வட்டாட்சியருக்கு உத்தரவிடப்படுகிறது.

12/1/18

சார் ஆட்சியர்,
மதுராந்தகம்.

பெறுநர்:
சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்
--வட்டாட்சியர் மூலமாக சார்வு செய்து சார்வு நகலை அனுப்ப வேண்டியது.

12/1/18

நகல்:
1. வட்டாட்சியர், மதுராந்தகம்.
2. காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு
--தகவலுக்காக அனுப்பப்படுகிறது.